<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டுர்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | 288/2013 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | மாரியப்பன் | நாள் | 13.08.2024 |
| தகப்பனார் பெயர் | மாதையன் | | |

**<u>வாதிகள் தரப்பில் பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை:-</u>**

1) என் தந்தையின் பெயர் மாதையன். இவ்வழக்கில் நான் எனக்காகவும், 2 முதல் 5 வரையிலான பிரதிவாதிகளுக்கும் சேர்த்துதான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரிதான். வாதிகள் எதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளனர் என்றால், 1954ம் வருடத்தில் வாதிகளின் முன்னோர்கள் எனது தந்தை வழி பாட்டிக்கு வழக்கு சொத்தை விற்பனை செய்துள்ளனர். மேற்படி விற்பனை குறித்து தெரிந்தும், பட்டா வாதிகளின் பாட்டி பெயரில் உள்ளதாக கூறி எங்களுடன் தகராறு செய்து, இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

2) என் பாட்டியின் பெயர் என்னவென்றால், சின்னு (எ) சின்னம்மாள். என் பாட்டி யாரிடமிருந்து தாவா சொத்தை வாங்கியதாக நான் சொல்கிறேன் என்றால், கந்தப்பன் மனைவி தானம்மாள் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றுள்ளார். எந்த வருடத்தில் கிரயம் பெற்றார் என்றால், 1954ம் வருடத்தில் கிரயம் பெற்றார். மேற்படி கிரய ஆவணம் தற்போது எங்கு உள்ளது என்றால், அசல் கிரய பத்திரம் வங்கியில் உள்ளது. அதன் நகலை நீதிமன்றத்தில் கொடுத்துள்ளோம்.

3) எந்த வங்கியில் மேற்படி அசல் ஆவணம் உள்ளது என்றால், வங்கி பெயர் தற்போது நினைவில்லை. என் தந்தை மேற்படி பத்திரத்தை வைத்து வங்கியில் கடன் வாங்கியதாக என்னிடம் கூறியுள்ளார். நான் சொல்வது தவறானது என்றாலும், என் தந்தை வங்கியில் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும், அவ்வாறு என்னிடம் அசல் பத்திரம் எதுவும் இல்லாததால் தான் மேற்சொன்னவாறு கூறுகிறேன் என்றாலும், சரியல்ல.

4) மேற்படி அசல் ஆவணம் எந்த வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ளது என்ற விவரங்களை என்னால் விசாரித்து கூற இயலுமா என்றால், கூற இயலும்.

(வாதிகள் தரப்பில் கேட்டுக்கொண்டதற்கிணங்க பி.வா.சா.1 ஐ குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

ஒம்/–திரு. R.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.